இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை– 2008/2009
மட்டம் - 5
LWU 3315/4312/4335 – பகிரங்க சர்வதேசச் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 03.04.2009 நேரம்: மு.ப 9.30 – நு.ப 12.30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்

1. ஸ்லோவிய சனனாயகக் குடியரசு தமது மிகப்பெரிய கப்பலான 'சில்வர் ஸ்கை' இனை, தம் அரசாங்கத்தினை எதிர்க்கும் கழகக்குழுவிற்கு எதிரான குடியியல் யுத்தத்தின் மத்தியில் இருக்கும் அங்ரியச் சனனாயக் குடியரசிற்கு அனுப்பியது. மோதல்கள் இடம்பெறும் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கான உணவு மற்றும் விளையாட்டுப்பொருட்கள் அடங்கிய பொதிகளை சுமந்துவருவதற்கு, அங்ரிய அரசாங்கமானது சில்வர் ஸ்கை கப்பலுக்கு அனுமதியளித்திருந்தது. கப்பல் பொருட்களைச் சுமந்து வந்து கொண்டிருக்கையில், அங்ரிய புலனாய்வுச் சேவையானது அக்கப்பல் துப்பாக்கிகள், வெடிபொருட்கள் என்பவற்றோடு கப்பல் தொழிலாளர்களுக்குள் கலந்துள்ள கழக்குழுக்களின் பல அங்கத்தவர்கள் ஆகியோரையும் சுமந்து வருவதாக தகவல் ஒன்றினைப் பெற்றது.

குறித்த கப்பல் அங்ரிய கடற்பரப்பிற்குள் நுழைந்ததும் அதன் கடற்படையினர் கப்பலை நிறுத்தி 20 நிமிடங்கள் வரையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன் பின்னர் அவர்கள் கப்பலை எரியூட்டினர். அங்ரியாவின் நடவடிக்கையை ஸ்லோவிய அரசாங்கம் கண்டித்ததுடன் அங்ரியாவிற்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்தது. மேலும் குறித்த கப்பலினை எரியூட்டியவுடனேயே அங்ரியா, உடேசிபா எனும் நாட்டில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவுசெய்தமையைக் கண்டித்ததுடன் ஸ்லோவிய அரசாங்கம் தமது யுத்தப் பிரகடனத்தினை நியாயப்படுத்தியது.

ஸ்லோவியாவின் சனாதிபதி விம்சாசு பிராட்லர், தமது அயல் நாடுகளான மலானா மற்றும் கமுனா ஆகியவற்றை, சில வேளைகளில் அங்ரியா அவ்விருநாடுகளுக்கும் எதிராகவும் ஆயுத மோதலில் ஈடுபடலாம் எனக்கூறி யுத்தத்தில் தம்முடன் வந்து இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். இவ்விரு நாடுகளின் உதவியுடன் ஸ்லோவியா அங்ரியாவினைத் தாக்கியது.

அதன்பின்னர் மலானாவை அடுத்துள்ள நாடான ரலானா, அங்ரியாவில் தமது நாட்டைச்சேர்ந்த 20 பிரசைகள் சிக்குண்டு இருப்பதனைக் கண்டுபிடித்து அவர்களை மீட்பதற்காக தமது படையினரை அங்ரியாவிற்கு அனுப்பியது. ரலானா படையினர் அங்ரியாவில் யுத்தத்தில் ஈடுபடும்போது தம்நாட்டு பிரசையென கண்டுபிடிக்கப்பட்டோருள் ஒருவர் உண்மையிலேயே அங்ரியாவிற்கு எதிரான கழகக்குழுவான தலாபாவின் அங்கத்தவர் என்பதனை கண்டுபிடித்தனர். ரலானாவின் படையினர் அவனையும் மீட்பு செய்ததுடன் அவனது அமைப்பிற்கு உதவுவதாகவும் உடன்பட்டனர்.

அங்ரியா தற்போது பயங்கரமான யுத்தத்திற்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அங்ரியாவின் சனாதிபதி உமது ஆலோசனையை வேண்டி நிற்கின்றார். அவருக்கு ஆலோசனை வழங்குக.

2. (அ) "மொன்டிவீடியோ" சமவாயமானது பொதுவாக வழக்காற்று சர்வதேச சட்டத்தில் நாடு எனும் அலகிற்கான தேவைப்பாடுகளை பிரதிபலிப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், சர்வதேச சமூகத்தில் இயைபுடைய ஏனைய சில காரணிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகின்றன."

மேற்கண்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(ஆ) அபிவிருத்தி அடைந்துவரும் நாடான கிரீன் உம் அபிவிருத்தியடைந்த நாடான ப்ளுவும் நட்புறவைப்பேணுகின்ற அண்மை நாடுகளாகும். கிரீன் சிறுபான்மை இனக்குழுவினால் நடார்த்தப்பப்படும் குடியியல் யுத்தத்திற்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இவ் யுத்தம் 11 வருடக் காலப்பகுதிக்கு மேலாக நடைடெற்றுக்கொண்டிருக்கின்றது. தற்போது ப்ளு, குடியியயல் யுத்தத்தின் விளைவாக கிரீனில் வளர்ந்துவரும் மனிதாபிமான நெருக்கடிகளை சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை ஆராய்வதற்கு விசேட தூதுவர் ஒருவரை அனுப்புவதற்கு முன்வந்தது. இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு கலந்துரையாடல்களுக்கு மத்தியிலும் கீரீனுடைய அமைச்சரவை விசேட தூதுவரை ஏற்பதற்கு மறுப்பு தெரிவித்தது. கிரீனுடைய தீர்மானத்தினை அறிந்த ப்ளுவில் உள்ள சிறுபான்மை இனக்குழுமத்தின் உறுப்பினர்கள் அவர்களது அரசாங்கத்திற்கு எதிராக நாடு தழுவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்தனர். கிரீனுடைய சனாதிபதி தமது சொந்த முறைகளைப் பயன்படுத்தி குடியியல் யுத்தத்தினைக் தாமே கையாளப்போவதாகவும் கீரீனுடைய இறைமை பாதிக்கும் எந்த இடையூறுக்கும் இடம்தரப்போவதில்லை எனவும் அறிவித்தார்.

ஆராய்க.

3. (அ) "ஒவ்வொரு இறைமையுடைய நாடும் மற்றைய ஒவ்வொரு இறைமையுடைய நாட்டினதும் சுதந்திரத்தினை மதிப்பதற்குக் கடமைப்பட்டதாகும் என்பதுடன் ஒரு நாட்டின் நீதி மன்றம், அதன் சொந்த இடப்பரப்பிற்குள் இன்னொரு அரசாங்கத்தினால் புரியப்பட்ட செயற்பாடுகளைத் தீர்மானிப்பதற்கு அமர்வதில்லை. அத்தகைய செயற்பாடுகளின் காரணமாக எழுந்த மனக்குறைகளில் இருந்து நிவாரணம் பெறக்கூடிய வழிவகைகள் கட்டாயமாக அவர்களுக்கிடையிலானதான இறைமை அதிகாரங்களின் மூலமாக பெறக்கூடியதாக இருக்கும்.

Underhill v *Hernandez* (1897) 168 U.S. 250 at p.252

ஆராய்க.

(ஆ) 2007ம் ஆண்டு சாய்போ நாட்டிற்கான ரொமாலானா குடியரசின் தூதுவராக திரு. ஜேம்ஸ் மெல்கினோன் பதவியமர்த்தப்பட்டார். 2008ம் ஆண்டு யூன் மாதம் சாய்போ தலைநகரில் ஜேம்ஸ் மெல்கினோன் வாகனத்தினை ஓட்டிச்செல்கையில் ஆறு நபர்களை வாகனத்தில் மோதி காயம் ஏற்படுத்தியதுடன் ஓர் பன்னிரண்டு வயது பெண்பிள்ளையை விபத்தில் கொலைசெய்தார். அவரின் குருதியில் 0.17 அளவு மதுசாரம் கலந்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவர் ஓர் இராஜதந்திரி என்ற வகையில் கட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

ரொமாலானா உயர்ஸ்தானிகராலயத்தின் உறுப்பினரான ரினாவா கோல்டன் ஹவுஸ் எனப்படும் சனாதிபதி மாளிகையில் ஓர் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்றார். ரினாவா கோல்டன் ஹவுஸ் இல் இருந்து ஓர் இரகசியக் கோப்பினை(file) திருடினார். அந்த ஊடகவியலாளர் மாநாட்டில்இருந்த தனியார் சாய்போ ஊடகத்தினால் அது பதிவுசெய்யப்பட்டது. அடுத்தநாள், சாய்போ இரகசிய சேவைகள் தினைக்களத்தினால்(சா.இ.சே.தி) ரினாவா விசாரணைக்குட்படுத்தப்பட்டார். முதலில் அவர் குற்றச்சாட்டினை மறுத்தாலும் பதிவுசெய்யப்பட்ட சாட்சிகளை காட்டியதுடன் தமது செயற்பாட்டினை ஒத்துக்கொண்டார். பின்னர் இராஜதந்திரியின் தனிப்பட்ட வேலையாளினால் தூதுவராலயத்தில் ஒழித்து வைக்கப்பட்ட கோப்பு வேலையாளின் உதவியுடனேயே சா.இ.சே.தி இனால் மீட்டெடுக்கப்பட்டது.

சா.இ.சே.தி குறித்த கோப்பினை ஆராயும் பொது, தூதுவராலயத்தினை அடுத்துள்ள தனியார் காணிகளின் உறுதிப் பத்திரங்கள் இராஜதந்திரியின் பெயரில் அக்கோப்பிட்குள் இருந்தமையை கண்டுபிடித்தனர். ஆவை போலிப்பத்திரங்களாக காணப்பட்டன.

மேற்கண்ட இரு சந்தர்ப்பங்களிலும் உள்ளடங்கியுள்ள சட்டப்பிரச்சினைகளை ஆராய்க.

4. லுடினன் மற்றும் காபூலியானா என்பன அயலயல் நாடுகளாகும். முன்று தசாப்பதங்களுக்கு மேலாக பல லுடினன் மக்கள் காபூலியானாவில் வேலைசெய்து வருகின்றனர். அண்மைய புள்ளிவிபரங்களின்படி காபூலியானாவின் வேலையின்மை 30% வீதத்தினால் அதிகரித்தது. தற்போது காபூலியானாவின் மக்கள் லுடினன் மக்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வேலைவாய்ப்புக்களுக்கு எதிராக எதிர்டார்ப்பாட்டங்களில் ஈடுபடுவதுடன் இப்பிரச்சினை நாட்டின் அமைதி குறிப்பாக இளைஞர்கள் மத்தியிலும் அமைதியின்மையினை ஏற்படுத்தியது. பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டில் கலவரம் ஏற்பட்டது.

குறித்த நிலமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக காபூலிய சனாதிபதி இராணுவத்தினை ஈடுபடுத்தினார். ஆனால், இராணுவ சிப்பாய்கள் கழகக்காரர்களுக்கு ஆதரவளித்தது மாத்திரமன்றி லுட்டினன் பிரசைகளின் ஆதனங்களை அழித்ததுடன் அப்பிரசைகளில் 10 பேரினைக் கொன்றனர். கழகக்காரர்களுக்கு ஆதரவளிக்கும் காபூலிய அரசாங்க அதிகாரிகளின் குழுவொன்று காபூலியாவில் அமைந்துள்ள லுட்டினனின் சமயஸ்தலங்களைத் தாக்கியதுடன் அதனை இராணுவம் இடையீடு எதுவும் செய்யாது நோக்கியது.

சர்வதேச நீதிமன்றத்தில், லுட்டினனின் பிரசைகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு காபூலியானா சர்வதேசரீதியில் பொறுப்பு கூற வேண்டும் எனக்கூறி காபூலியான அரசுக்கு எதிராக லுட்டினன் அரசாங்கம் வழக்கிடுவதற்கு உத்தேசித்துள்ளது. எப்படியிருப்பினும் காபூலியானா தனது அரசாங்க அங்கத்தவர்களின் வலுவிகழ்ந்த செயற்பாடுகளுக்கு தாம் பொறுப்பில்லை என்றுகூறி எல்லா குற்றச்சாட்டுக்களையும் மறுக்கின்றது.

(அ) லுட்டினனுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) லுட்டினனுக்கு கிடைக்கக்கூடிய நிவாரணங்கள் என்ன?

5. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப்பற்றி குறிப்பு வரைக.

(அ) பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான நீதிமன்ற முறைமைகள்;

(ஆ) சர்வதேச சட்டத்தின் இரண்டாம் நிலைத் தோற்றுவாய்கள்;

(இ) பிராந்தியங்களின்மீதான இறைமையைப் பெறுகின்ற பாரம்பரிய முறைகள்;

(ஈ) ஐக்கிய நாடுகளின் அங்கங்கள் (Organs).

6. (அ) "தனிநபர்கள் சர்வதேச சட்டத்தின் விடயப் பொருள் அல்ல என்பதோடு நாட்டின் தொடர்பினை விடுத்து தனியாக வேறுபடுத்திப்பார்க்கின்ற சட்ட ஆளுமை தனிநபர்களுக்கு இல்லை என்ற கருத்து பாரம்பரியமாக இருந்துவரினும் இந்தக்கருத்து, சர்வதேச சட்டத்தின் இறுதி இலக்காக அடிக்கடி தனிநபர்களே உள்ளனர் என்ற உண்மையின் அடிப்படையில் மாற்றமடைந்தது."

மேற்கண்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(ஆ) 9 வருடங்களுக்கு மேலாக லலூகா நாடும் இந்தோனியா குடியரசும் பிராந்தியக்கோரிக்கைகளின் அடிப்படையில் யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் இந்த நாடுகளுக்கிடையிலான யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கென முயற்சித்துக்கொண்டிருப்பதுடன், பீட்டர் க்ரைசிஸ் எனும் நடுத்தீர்ப்பாளரையும் மேலும் மூன்று நிபுணர்களையும் நியமித்தது. பீட்டர் க்ரைசிஸ் ஓர் சமாதானத்திட்டத்தினை வரைந்தார். அத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக அவர் லலூகா தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டார். அதேவேளை நடுத்தீர்ப்பு அதிகாரிகளில் ஒருவர் இந்தோனியாவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் இரகசியமான ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளதாக லலூகாவின் அரசாங்க ஊடகம் குற்றம் சாட்டியது. மேலும், லலூகாவின் யுத்தப்பாதிப்புகளுக்கு உட்பட்ட இடத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமைக்காக ஏனைய இரு ஐக்கிய நாடுகளின் அதிகாரிகளுக்கும் எதிராக பொலிஸ் முறைப்பாடு கோப்பிடப்பட்டிருந்தது.

லலூகாவின் அரசாங்கத்திடம் இருந்து ஐக்கிய நாடுகள், தம் நிறுவனத்திற்காகவும் பீட்டர் க்ரைசிஸ் இன் குடும்பத்திற்காகவும் நஷ்ட ஈடு கோருகின்றது. எனினும் லலூகா, தாம் ஐக்கிய நாடுகளின் ஓர் அங்கத்தவர் இல்லை என்ற காரணத்தின் அடிப்படையில் பொறுப்புடமையை ஏற்பதற்கு மறுக்கின்றது. மேலும், ஐக்கிய நாடுகள் அதிகாரிகளின் சட்ட முரணான செயற்பாடுகளுக்கு லலூகா நஷ்ட ஈடு கோருகின்றது.

சர்வதேச சட்டத்தின் கீழ் உரிய திறத்தவர்களுக்கு அவர்களின் உரிமை மற்றும் கடமைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குக.

7. (அ) "அரச இறைமையின் ஓர் முக்கியமானதும் உண்மையிலேயே பிரதான பண்டாகவும் நியாயாதிக்கம் என்பது காணப்படுகின்றது. சட்ட உறவுகளையும் கடமைகளையும் நிறுத்துவதற்கு அல்லது உருவாக்குவதற்கு அல்லது மாற்றியமைக்கக்கூடிய ஓர் அதிகாரத்தினை அது செயற்படுத்தும்."

Makolm N.Shaw, International Law, 5th ed(2003), at p. 572

நியாயாதிக்கத்தின் பாரம்பரிய அடிப்படைகளின் பின்னணியில் மேற்கண்டகூற்றை ஆராய்க.

(ஆ) உமானா அரசாங்கத்திற்கு எதிரான வெற்றிகரமற்ற புரட்சியின் விளைவாக பீட்டர் சாமில் எனப்படும் நன்கறியப்பட்ட உமானாவின் கழகக்காரனுக்கு ரிசிதோமா நாடு அடைக்கலம் கொடுத்தது.

இரட்டை குற்றவியல் விதி தெளிவாக உள்ளடக்கப்பட்டிருக்கும் 2005ம் ஆண்டின் மீளொப்படைப்பு மீதான இருதரப்பு பொருத்தனையின் கீழ் உமானா அரசு ரிசிதோமா விடம் இருந்து பீட்டர் சாமில் இனை மீளொப்படைக்கக் கோருகின்றது. அப்பொருந்தனைக்கமைய இரு நாடுகளுக்கும் எதிராக கழகம் செய்வது மரணதண்டனைக்குரிய குற்றமாகும். இரண்டு காரணங்களின் அடிப்படையில் உமானா பீட்டர் சாமிலின் மீளொப்படைப்பினைக் கோர முடியாது என ரிசிதோமா கூறுகிறது. அவையாவன (i) அடைக்கலம் கோரியவருக்கு எதிராக முகத்தோற்ற வழக்கினை அது காட்டவில்லை. (ii) கூறப்படுகின்ற அக்குற்றம் தெளிவாக் அரசியல் சார்ந்ததொன்றாக உள்ளது.

சர்வதேச நீதிமன்றம் முன்டாக ரிசிதோமாவிற்கு எதிராக உமானா வழக்கிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

மேற்கண்ட வழக்கில் இயைபுடையதாகவுள்ள சர்வதேச சட்டக்கோட்பாடுகளை ஆராய்க. இலங்கையின் மீளொப்படைப்பு சட்டத்துடன் உமது தீர்மானங்களை ஒப்பிடுக.

8. சர்வதேச சட்டத்தினை நாடுகள் தமது உள்நாட்டு சட்டத்தினுள் உள்வாங்கும் பொழுது சர்வதேச சட்டத்தில் நன்கு இனம்காணப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் காணப்பட்டாலும், மிகத் தெளிவான கோட்பாட்டு ரீதியான பிரிப்புக்கள், நடைமுறையில் உலகின் நவீன அபிவிருத்திகளுடன் நோக்கும் பொழுது பொருத்தமற்றதாக மாறி வருகின்றது.

ஆராய்க.

(பதிப்புரிமையுடையது)